# பதவி வெற்றிடங்கள்
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. <u>பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)</u>

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் -**
**<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிட்டுள்ள 1 ஆம் அல்லது 2 ஆம் அல்லது 3 ஆம் தகைமைகளைக் காண்க)</u>**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சமூக அறிவியலில் இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் முதுகலை பட்டப்படிப்பு தகுதி (முதுநிலை) அல்லது மேற்குறிப்பிட்ட பதவிக்கான பாடநெறியுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர்.

**மற்றும்**

அரச துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவத்தை கொண்டிருத்தல்.

**அல்லது**

2. மேற்குறிப்பிட்ட பதவிக்கான பாடநெறியுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழு உறுப்பினர்.

**மற்றும்**

அரச துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவத்தை கொண்டிருத்தல்.

**அல்லது**

3. மேலே இல 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன் இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) முதலாம் தர உத்தியோகத்தராக இருத்தல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் -**
**<u>உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிட்டுள்ள 1 ஆம் அல்லது 2 ஆம் தகைமைகளைக் காண்க)</u>**

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களின் தகைமைகளுக்கு நிகரான தகைமையை கொண்டிருத்தல்.

2. மேற்குறிப்பிட்ட பதவிக்கான பாடநெறியுடன் தொடர்புடைய சிரேஷ்ட முகாமைத்துவ வகுதியிலுள்ள (MM) பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை கொண்டிருத்தல்.

**சம்பளம்: HM 1-1-2025 (ரூபா. 140,640 - 15× 4,100 - 202,140)**
**(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01.2025) மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்)**

**வயதெல்லை:** 35வயதிற்கு குறையாதவராகவும் 55வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

நேர்முகப்பரீட்சைக்கான புள்ளித்திட்டம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தொடர்புடைய கூடுதல் அனுபவம் - | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய கூடுதல் தகைமைகள் - | 30 புள்ளிகள் |
| ஏனைய அடைவுகள் - | 15 புள்ளிகள் |
| நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சி - | 25 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சியின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரஜையாக இருப்பதோடு சிறந்த நடத்தையுடையவராகவும், கடமைகளை திறம்பட மேற்கொள்வதற்கான உடல், உள ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.
3. ஏற்கனவே அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தாம் சேவையாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக இப்பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேலும் குறித்த பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து, நியமனத்திற்காக விண்ணப்பதாரி விடுவிக்கப்படமுடியும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
4. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளிலும் பூரணத்துவம் பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புவிடுக்கப்படுவர்.
5. மேற்கண்ட கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. விண்ணப்பத்தாரரின் அனைத்து தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனைத்து வகையிலும் பூரணத்துவம் அடைந்திருந்தால் மாத்திரமே, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான விண்ணப்பத்திற்கு தகைமையுள்ளவர் என்று கருதப்படுவார்.
7. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் குழுமம் நியமனம் வழங்கும் அதிகாரத்தை கொண்டிருப்பர்.
8. வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் நபர்களின் சம்பள அளவுத்திட்டம் ஆரம்ப மட்டத்தில் காணப்படும் அதேவேளை, உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் நபர்களின் சம்பளம் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் ஏற்பாடுகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி விண்ணப்பம் மற்றும் இரண்டு உறவுமுறை தொடர்பல்லாத நடுவர்களின் விபரம், கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கிய சுயவிபரக்கோவை என்பன **2026 ஆம் ஆண்டு மே மாதம் 21** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு “செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல 14, ஆர் த மெல் மாவத்தை, கொழும்பு 04” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
**27.04.2026**